# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண் 94/மா/2026
நாள்21.07.2026

வீ. சேகர்,
கோயம்புத்தூர் --- முறையீட்டு மனுதாரர்

(1) உதவி ஆணையாளர்,
மத்திய மண்டலம்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
(2) திரு. அருணாசலமூர்த்தி.
கோயம்புத்தூர். --- எதிர் மனுதாரர்கள்

கோயம்புத்தூர்–641 045, இராமநாதபுரம் (PO), நடராஜன் காலனி, கதவு எண் 101.A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. வீ. சேகர் என்பவரின் 21.01.2026 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் 23.01.2026 அன்று பெறப்பட்டு 94/மா/2026 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கோயம்புத்தூர்–641 045, இராமநாதபுரம் (PO), நடராஜன் காலனி, கதவு எண் 101.A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. வீ. சேகர் என்பவர் தனது 21.01.2026 நாளிட்ட முறையீட்டு மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"பழைய பிளாஸ்டிக் இரும்புகடை & குடோன் அமைத்து குடியிருப்பு பகுதியில், வீட்டை கடை, குடோன் அமைத்து பயன்படுத்தப்பட்டது.

மேற்படி குடியிருப்பாக இருந்த இடம் 996, திருச்சி ரோடு, கோயம்புத்தூர் விலாசம் ஆகும். ஆனால் அந்த விலாசத்தில் உள்ள வழியை பயன்படுத்தாமல் குறைந்து விலைக்கு வாங்கி பின் பகுதியில் வாய்க்கால் பகுதியை ஆக்கிரமிப்பு செய்து வழி வைத்து பயன்படுத்தப்படுகின்றது.

மேற்படி பழைய பிளாஸ்டிக் இரும்புகடை & குடோன் வாய்க்காலை ஆக்கிரமிப்பு செய்து எங்கள் பகுதியான நடராசதேவர் காலனி குடியிருப்பு பக்கம் வழி அமைத்துள்ளனர். எங்கள் நடராச தேவர் காலனியின் சாலை மிகவும் குறுகலான சாலையாகும். மேலும் ஒரு வழிப் பாதையாகும்.

கடை குடோன் மீது 2015–ம் ஆண்டு, மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், மாநகராட்சி நகர் நலப்

பிரிவு ஆய்வு செய்து 16–ம் ஆண்டு கம்பெனி, குடோன், கடை அகற்ற நோட்டீஸ் வழங்கப்பட்டது. அகற்றாமல் தொடர்ந்து நடைபெற்றது. உடனடியாக 2016–ம் ஆண்டு எங்கள் காலனி சார்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

மேற்படி இடத்திற்கு கடை உரிமையாளர் M. அருணாசலமூர்த்தி அவர் குடியிருக்கும் வாடகை வீட்டின் விலாசப்படி உள்ள ஆதார் அட்டையைப் பயன்படுத்தி வரைபட அனுமதி பெற்றுள்ளார். அந்த வரைபடம் குடியிருப்பாக வரைபடம் வரைந்தும் (முதல் தளம் வீடு, தரை தளம் கடை & குடோன்) திருச்சி ரோடு விலாசப்படி வழிஇல்லாமல் அனுமதிப் பெற்றுள்ளார். அதன்படி உடனடியாக கட்டிடம் கட்டி வந்தனர்.

கடை & குடோன் அகற்றாததால் எங்கள் காலனி குடியிருப்போர் மூலம் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கின் தீர்ப்பு வருவதற்குள் மேற்படி புதிய கட்டிடம் நான்கு மாடிகளாக 4000 சதுர அடிகள் வணிக வளாகமாக கட்டப்பட்டது.

மேற்படி கட்டிடத்தின் மேல் புகார் மனு ஆட்சியரிடம் கொடுக்கப்பட்டது. அதன்படி உள்ளூர் திட்ட குழுமத்தின் மூலம் கட்டிடத்திற்கு சீல் வைக்கப்பட்டது. இந்த நேரத்தில் 2018–ம் ஆண்டு உயர்நீதிமன்ற வழக்கின் தீர்ப்பு கிடைத்தது. அதில் கம்பெனி அகற்றப்பட்டது. கடை & குடோன் அவர்கள் சொல்லும் விலாசத்தில் எங்கள் கடை & குடோன் இல்லை என்று வாக்குமூலம் கொடுத்து வழக்கு முடிக்கப்பட்டது. அதன் அடிப்படையில், நகர் நலம், மாநகராட்சி மத்திய மண்டல உதவி ஆணையாளர் மூலம் கடை & குடோனுக்கு சீல் வைக்கப்பட்டது. சிறிது காலத்தில் பொருள்களை அகற்றி அதே கட்டிடத்தில் தகர சீட்டுகளால் அடைப்புகள் ஏற்படுத்தி உரிமையாளர் வாடகை வீட்டை காலி செய்து கடை & குடோன் கட்டிடத்தில் குடிபெயர்ந்தார் மற்றும் மேற்படி கட்டிடத்தின் சீல் அகற்ற சென்னை உயர்நீதிமன்றத்தில் மாநகராட்சி, உள்ளூர் திட்ட குழுமத்தின் மேல் வழக்கு தொடர்ந்தார்.

மேற்படி வழக்கு 2022–ம் ஆண்டு தள்ளுபடி செய்து கட்டிடத்தை அகற்ற தீர்ப்பு வழங்கப்பட்டது. உரிமையாளர் உடனடியாக உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். அந்த வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டு முதல் தீர்ப்பின்படி புதிய வரைபடம் மூலம் திருத்தப்பட்ட கட்டிடத்தின்படி மீண்டும் அனுமதி பெற வலியுறுத்தப்பட்டது.

2023–ம் ஆண்டு எந்த வரைபட அனுமதியும் பெறாமல் கட்டிடம் இருந்தபடியே எங்கள் பகுதியில் கடை & குடோன் மற்றும் குடியிருந்து வருகின்றனர்.

இதுசம்பந்தமாக எங்கள் பகுதி தி.மு.க. கட்சியின் வார்டு செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் என்னை கைப்பேசி மூலம் மிரட்டல்களை விடுத்தனர். அதன்பிறகு மாநகராட்சி அலுவலர்கள் மூலம் நடவடிக்கைகள் எடுக்காமல் இருக்க அரசியல் பலத்துடன் கைஊட்டல் பெற்று புகார் மனு சம்பந்தமாக மாநகராட்சி அலுவலர்கள் நடவடிக்கை எடுக்காததால் சந்தேகம் ஏற்படுகின்றது.

2024–ம் ஆண்டு என்மீது உரிமையாளர் காவல் துறையில் புகார் மனு அளித்து தனிப்பட்ட முறையில் என்னை தொழில் செய்யவிடாமலும், குடும்பத்திற்கு தொல்லை கொடுப்பதாகவும் மாநகராட்சி அனுமதி வழங்கியும் விடாமல் பிரச்சனை செய்து வருகிறார் என்றும் அபாண்டமாக பழி சுமத்தி கோவை கூடுதல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து உள்ளார். வழக்கு இன்று வரை நடந்து வருகின்றது.

<u>புகார் மனு 1–ன்படி விவரம்:–</u>

1) மாநகராட்சி ஆணையாளர், உதவி ஆணையாளர், நகர் நல அலுவலர் ஆகியோர் மூலம் கடை குடோன்& கம்பெனி அகற்ற நோட்டீஸ் வழங்கப்பட்டது.
2) மேற்படி கடை & குடோன் பிரதான வழிஇல்லாமல் பயன்படுத்த அனுமதி மறுக்கப்பட்டது.
3) மேற்படி குடோன், கம்பெனி முழுக்க முழுக்க குடியிருப்பு பகுதி என்பதாலும் சாலை குறுகலாகவும், ஒருவழிப்பாதை என்பதாலும், தீ விபத்து ஏற்பட்டால் விபத்தை தடுக்க முடியாது என்பதால் அகற்ற நோட்டீஸ் வழங்கப்பட்டது.
4) மேற்படி குடோன், கடை, கம்பெனி முழுவதும் குடியிருப்பு பகுதி என்று மாநகராட்சி சான்று வழங்கியது.
5) உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி வழக்கு முடித்து வைக்கப்பட்டது என்ற தீர்ப்பின் நகல் கிடைத்தது.
6) உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி கம்பெனி அகற்றப்பட்டது. கடை, குடோன் சீல் வைக்கப்பட்டது.
7) அகற்றப்பட்ட குடோன், கம்பெனி அகற்றப்பட்ட இடத்தில் மீண்டும் செயல்படுகின்றது.
8) அகற்றப்பட்ட கடை, குடியிருப்பு சீல் வைக்கப்பட்ட கட்டிடத்தில் பிரதான வழி இல்லாததால் எங்கள் காலனி பக்கம் மீண்டும் செயல்படுகின்றது.
9) மீண்டும் மீண்டும் ஆட்சியர், முதலமைச்சர் தனிப்பிரிவு, ஆணையாளர் ஆகியோருக்கு மனு அளித்தால் எந்த நடவடிக்கையும் இல்லை. கடைசியாக 2025–ம் ஆண்டு பிப்ரவரி மாத தேதியில் அடிப்படையில் மூடி சீல் வைக்கப்படும் என்று சார்பு செய்யப்பட்டுள்ளது என்று பதில்கள் வந்த வண்ணம் உள்ளது.

மேற்படி சீல் வைக்கப்படும் என்ற நோட்டீஸ் கட்டிட வரைபடம் இல்லாத கட்டிடத்திற்கு வழங்கப்பட்ட நோட்டீஸை கடை, குடோன் அகற்ற என்று பதில் தருகின்றனர்.

<u>புகார் மனு 2–ன் விபரம்:</u>

1) மாவட்ட ஆட்சியர் பரிந்துரை மூலம் உள்ளூர் திட்ட குழுமம் ஆய்வு செய்து கட்டிடம் சீல் வைக்கப்படும் என்று நோட்டீஸ் வழங்கப்பட்டது.
2) உள்ளூர் திட்ட குழுமம் மூலம் கட்டிட வரைபட அனுமதிக்கு மாறாகவும், இரண்டாவது, மூன்றாவது தளங்கள் வரைபட அனுமதி இல்லாமலும், பக்க திறவு, பார்க்கிங் வசதி, பிரதான வழி இல்லாமலும் விலாசம் மாறி அமைக்கப்பட்டுள்ளது என்றும் கூறி மூடி முத்திரையிடப்பட்டது.
3) உயர்நீதிமன்ற வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு எந்த மாறுதலும் செய்யாமலும் கடை, குடோன், வீடு திறப்பு விழா செய்து மாநகராட்சி மத்திய மண்டல நகரமைப்பு அலுவலர் உதவியுடன் செயல்படுகின்றது.

மாநகராட்சி மத்திய மண்டல நகரமைப்பு அலுவலரை நேரடியாக சந்தித்தப்பொழுது உங்கள் வயது, குடும்பங்களை சொல்லி மேற்படி உரிமையாளர் பண வசதி உடையவர். இதில் தலையிட வேண்டாம் என்று அறிவுரை கூறினர்.

மேற்படி கடை & குடோன் அகற்ற மனு செய்து (ஆட்சியர், முதலமைச்சர் தனிப்பிரிவு) 3 மாதமாக பதில் தராததால் தகவல் உரிமைச் சட்டம் 5–ம்படி தகவல் கேட்கப்பட்டது. அதற்கு 30 தினங்களுக்குப் பிறகு கட்டிடம் சீல் வைக்கப்படும் என்று சார்வு செய்யப்பட்டது என்று பதில் கிடைக்கப் பெற்றது.

மீண்டும் மேல்முறையீடு அலுவலர் அவர்களுக்கு சரியான பதில் இல்லை. மனுவிற்கான சரியான தகவல் கேட்டேன் அதற்கும் 30 தினங்களுக்குப் பிறகு அந்த பதிலை தகவலாக கிடைக்கப் பெற்றது.

அத்துடன் வரைமுறை இல்லாத அனுமதி பெறாத கட்டிடம் சம்பந்தமான முந்தைய பதில்களை தகவல்களாக தந்தனர். அதிலும் நமது மனுவின் சம்பந்தமில்லாத உரிமையாளர் சம்பந்தப்பட்ட கட்டிட நகலை இணைத்துள்ளனர்.

நான் மீண்டும் மாநில தகவல் ஆணையாளர் அவர்களுக்கு மேல்முறையீடு செய்துள்ளேன்.

மேற்படி கட்டிடம் சம்பந்தமான மேல்முறையீடு தகவல்களை நேரில் சென்று துணை ஆணையாளர், உதவி ஆணையாளர் (மத்திய மண்டலம்) அவர்களிடம் சமர்ப்பித்து பதில் கேட்டேன். விபரம் அறிந்து தகவல் கிடைக்குமாறு செய்யப்படும் என்றார்.

மேற்படி கட்டிடம் சம்பந்தமான மனு இயக்குநர், முதலமைச்சர் தனிப்பிரிவு அனுப்பியதற்கு கடந்த 2025, அக்டோபர் மாதம் 11–ம் தேதி கிடைக்கப் பெற்ற பதிலின்படி மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் அவர்கள் இன்றைய தேதிபடி உயர்நீதிமன்ற வழக்கு எண் 8198/2023–ன்படி 996, திருச்சி ரோடில் அமையும் வணிக கட்டுமானத்திற்கு திருத்திய அனுமதி பெற்றுக் கொள்ள தெரிவிக்கப்பட்டு, இதுவரை அருணாச்சலமூர்த்தி அனுமதி பெற்றுக் கொள்ள தெரிவிக்கப்பட்டு இதுவரை அருணாச்சலமூர்த்தி மூலம் ஏதும் பெறப்படவில்லை. இதுகுறித்து கட்டிட உரிமையாளர், மாநகர் ஆணையாளர் அவர்களுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், விபரத்தினை தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்படுகின்றது என்றும் கூறி எனக்கு பதில் கிடைத்துள்ளது.

மேற்படி கட்டிடம் 996, திருச்சி ரோடில் அமையும் வணிக கட்டிடத்திற்கு தான் சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

மேற்படி புகார் சம்பந்தமாக உயர்திரு. உயர் அதிகாரி அவர்கள் நடவடிக்கை எடுத்து உத்தரவு ஆணை வழங்க வேண்டுகின்றோம்.''

2. மனுதாரரின் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 22.04.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டல உதவி ஆணையாளரிடம் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், மனுதாரரின் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 03.06.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 07.05.2026 நாளிட்ட அழைப்பாணைகள்அனுப்பப்பட்டன.

4. இந்நிலையில், கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் உதவி ஆணையாளர் தனது 01.06.2026 நாளிட்ட கடிதம் ந.க. எண்.10116/2021/எச்.1 (ம)–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்:

''கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டலம், வார்டு எண் 65 நடராஜ தேவர் காலனியில் மாநகராட்சியிடம் வணிக உபயோகத்திற்காக தரை மற்றும் முதல் தளம் கட்ட

அனுமதி பெறப்பட்டு கட்டிட விதிகளுக்கு முரணாகவும், கூடுதலாக இரண்டாம் தளம் மற்றும் டெரஸ் தளம் கட்டியும் பக்கவாட்டு திறவிடங்கள் விடாமலும் கட்டப்பட்டுள்ளதை தொடர்ந்து திரு. வீ. சேகர் (செயலாளர்), நடராஜ தேவர் காலனி குடியிருப்போர் பொது நல இயக்ககம், புகார் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து உறுப்பினர்–செயலர், உள்ளூர் திட்டக் குழுமம், கோயம்புத்தூர் அவர்களின் கடிதம் எண்.5276/2016/உதிகு–1, நாள் 25.11.2016–ன்படி தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச்சட்டம் 1971ன், பிரிவுகள் 56 மற்றும் 57–இன் கீழ் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டு வரும் கட்டிடத்தை நிறுத்துமாறும் மீறினால் கட்டிட வளாகத்தை பூட்டுதல், முத்திரையிடுதல் மற்றும் கட்டுமான பொருட்களை கைபற்றுதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அறிவுறுத்தி உள்ளூர் திட்டக்குழுமம் மூலம் அறிவிக்கை சார்வு செய்யப்பட்டுள்ளது. மேலும், தொடர்ந்து கட்டுமானப் பணி தொடர்ந்து நடைபெற்று வந்ததால் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 56/2A–இன் கீழ் இரண்டாம் தளம் மற்றும் டெரஸ் தளம் அலுவலகம் மூலம் 19.01.2017 அன்று பூட்டி சீல் வைக்கப்பட்டது.

<u>அனுமதி பெறப்பட்ட மற்றும் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் விவரம்:–</u>

| | அனுமதிக்கப்பட்ட தளங்கள் | பரப்பு (ச.மீ.) | அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் விவரம் | பரப்பு (ச.மீ) | அனுமதிக்கு மேல் கட்டியது பரப்பு (ச.மீ.) |
|---|---|---|---|---|---|
| 1. | தரை தளம் | 91.95 | தரை தளம் | 177.40 | 85.45 |
| 2. | முதல் தளம் | 91.95 | முதல் தளம் | 177.40 | 85.45 |
| 3. | – | – | இரண்டாம் தளம் | 177.40 | 177.40 |
| 4. | – | – | மேல்தளம் | 103.22 | 103.22 |
| | மொத்தம் | 183.90 | மொத்தம் | 635.42 | 451.52 |

| வணிக உபயோக அனுமதி | வணிக உபயோகம் மற்றும் குடியிருப்பு உபயோக கட்டிடம் | வணிக உபயோகம் மற்றும் குடியிருப்பு உபயோக கட்டிடம் |
|---|---|---|
| **அனுமதி பெறப்பட்ட வரைபடத்தில் உள்ள பக்கத் திறவிடங்கள் மற்றும் அனுமதிக்கு மாறாக மற்றும் கூடுதலாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் பக்கத் திறவிடங்கள்:–** | | |
| பக்கத் திறவிடங்கள் | அனுமதி பெறப்பட்ட வரைபடத்தில் உள்ள பக்கத் திறவிடங்கள் (மீட்டரில்) | அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் பக்கத்திறவிடங்கள் (மீட்டரில்) |
| முன்பக்கத்திறவிடம் (தென்புறம்) | 1.75 | 3.10 |
| பின்பக்கத்திறவிடம் (வடபுறம்) | 6.55 | பக்கத்திறவிடம் விடப்படவில்லை |
| பக்கவாட்டுத் திறவிடம் (கிழபுறம்) | 3.25 | 3.50 |
| பக்கவாட்டுத் திறவிடம் (மேற்புறம்) | 1.75 | 1.00 |

(BL/0184/2015/MH6/C) நாள் 29.10.2015–இன்படி அனுமதி பெறப்பட்ட வரைபடத்தில் உள்ளவாறு பக்கத்திறவிடங்கள் விடப்படவில்லை.

இதனை தொடர்ந்து கட்டிட உரிமையாளர் (திரு M.அருணாச்சலமூர்த்தி) தொடர்ந்த மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண் W.P No.19202/2021, நாள் 23.09.2021–இன்படி அரசு முதன்மைச் செயலாளர் அவர்களை பிரதிவாதியாக சேர்த்து மேல்

முறையீட்டு வழக்கு தொடரப்பட்டது. மேல் முறையீட்டு வழக்கின் தீர்ப்பில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் உரிய சட்ட விதிகளின்படி 8 வார காலத்திற்குள் நடவடிக்கை எடுக்க உத்திரவிடப்பட்டதைத் தொடர்ந்து, அரசு முதன்மைச் செயலர், வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அவர்களின் நே.மு.க. எண்15142/UD4(L.Re-2)2021-4 நாள் 16.12.2021–இன்படி நகர் ஊரமைப்பு வளர்ச்சித் துறை, கோயம்புத்தூர் மாநகராட்சி மற்றும் கட்டிட உரிமையாளரான அருணாசலமூர்த்தி ஆகியோரை நேரில் சென்னையில் ஆஜராகி விசாரிக்க அழைப்பு விடுக்கப்பட்டு 24.12.2021 அன்று நேரடி விசாரணை நடைபெற்றது. விசாரணையில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் சட்ட திட்டங்களின்படி கோயம்புத்தூர் மாநகராட்சியால் வழங்கப்பட்ட கட்டிட அனுமதி வரைபடத்தில் உள்ளபடி கட்டிடத்தினை வடிவமைக்கவும், அனுமதிக்கு மாறாகவும், கூடுதலாகவும் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தை இடிக்கவும் மூன்று மாத கால அவகாசம் அளிக்கப்பட்டது.

ஆனால், இதுநாள் வரை அனுமதிக்கு மாறுதலாகவும், கூடுதலாகவும் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தை சரி செய்யவோ, இடிக்கவோ எந்த வித நடவடிக்கையும் எடுக்காமல் தமிழ்நாடு அரசு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் உத்தரவினை அமல்படுத்தாமல் பணியினை செய்யாமல் ஏற்கனவே நிலையில் உள்ள உள்ள கட்டிடத்தை எவ்வித மாற்றமும் செய்யாமல் பயன்படுத்தி வருகிறார்.

மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண் W.P.No.8198/2023, உத்திரவு நாள் 21.04.2023–இன்படி,

**Para-8:**

Therefore in view of the above, we are granting liberty to the petitioner to appear before the Deputy Director of Town and Country Planning and make a proper application for seeking revised planning approval, if so advised, within a period of two weeks from the date of receipt of a copy of this order.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவில் இணை இயக்குநர், நகர் ஊரமைப்பு துறையிடம் திருத்திய கட்டிட அனுமதி இரண்டு வாரத்திற்குள் பெற தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கூறிய நீதிமன்ற உத்தரவின்படி கட்டிடத்தின் மீது திருத்திய கட்டிட அனுமதி பெறுவதற்கு திரு. அருணாச்சல மூர்த்தி என்பவர் மூலம் விண்ணப்பம் பெறப்பட்டிருந்தால் அதன் விவரத்தை தெரிவிக்குமாறு உறுப்பினர்–செயலர், உள்ளூர் திட்டக் குழுமம், கோயம்புத்தூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.10116/2021/எச்.1 (ம) நாள் 08.11.2023–ன் வாயிலாக அனுப்பப்பட்டது. இதுநாள் வரை பதில் கடிதம் ஏதும் பெறப்படவில்லை. இதனை தொடர்ந்து தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் அவர்களின் முறையீட்டு மனு எண் 94/மா/2026–2 விசாரணை அறிவிப்பு நாள் 07.05.2026–ல் முறைமன்ற நடுவத்தில் 03.06.2026 அன்று முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற உள்ள விசாரணைக்கு உரிய ஆவணங்களுடன் விளக்கம் அளிக்குமாறு ஆணையிடப்பட்டுள்ளது.

உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக் குழுமம், கோயம்புத்தூர் அவர்களுக்கு கடிதம் ந.க. எண் 10116/2021/எச்1(ம) நாள் 18.05.2026–ல் நினைவூட்டு அனுப்பப்பட்டு, மேற்படி கட்டிடத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது வரை தொடர் நடவடிக்கையில் உள்ளது என்ற விபரம் பணிவுடன் தெரிவித்து கொள்ளப்படுகிறது.”

5. மனுதாரர் 03.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"கோயம்புத்தூர், திருச்சி ரோடு, எண்.996 என்கிற முகவரியில் கடை, குடோன் அமைத்து பின்பகுதியில் உள்ள வாய்க்கால் பகுதியினை ஆக்கிரமித்து முறைகேடாக எங்கள் பகுதியான நடராசதேவர் காலனி குடியிருப்பு பக்கம், கடை உரிமையாளர் திரு.M.அருணாசலமூர்த்தி வழி அமைத்துள்ளார். எங்கள் நடராச தேவர் காலனியின் சாலை மிகவும் குறுகலான சாலையாகும். மேலும் ஒரு வழிப் பாதையாகும்.

மேற்கண்ட குடோன் குறித்து 2015–ம் ஆண்டு, மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், மாநகராட்சி நகர் நலப் பிரிவு ஆய்வு செய்து 2016–ம் ஆண்டு கம்பெனி, குடோன், கடை அகற்ற நோட்டீஸ் வழங்கப்பட்டது. ஆனால் அகற்றப்படவில்லை.

மேற்படி புதிய கட்டிடம் நான்கு மாடிகளாக 4000 சதுர அடிகள் வணிக வளாகமாக கட்டப்பட்டது.

மேலும், உள்ளூர் திட்ட குழுமத்தின் மூலம் கட்டிடத்திற்கு சீல் வைக்கப்பட்டது. மேற்கண்ட கட்டிடம் தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரபட்ட வழக்கில் 2018–ம் ஆண்டு உயர்நீதிமன்ற வழக்கின் தீர்ப்பின்படி கம்பெனி அகற்றப்பட்டது. ஆனால் மீண்டும் அதே கட்டிடத்தில் தகர சீட்டுகளால் அடைப்புகள் ஏற்படுத்தி உரிமையாளர் கடை & குடோன் கட்டிடத்தில் குடிபெயர்ந்தார் மேற்படி கட்டிடத்தின் சீல் அகற்ற சென்னை உயர்நீதிமன்றத்தில் மாநகராட்சி, உள்ளூர் திட்ட குழுமத்தின் மேல் வழக்கு தொடர்ந்தார்.

மேற்படி வழக்கு 2022–ம் ஆண்டு தள்ளுபடி செய்து கட்டிடத்தை அகற்ற தீர்ப்பு வழங்கப்பட்டது. உரிமையாளர் உடனடியாக உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். அந்த வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டு முதல் தீர்ப்பின்படி No.996 திருச்சி ரோட்டில் அமையும் கட்டிடத்திற்கு புதிய வரைபடம் மூலம் திருத்தப்பட்ட கட்டிடத்தின்படி மீண்டும் அனுமதி பெற வலியுறுத்தப்பட்டது.

இப்பொருள் தொடர்பாக கோயம்புத்தூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தின் இணை இயக்குநர் / உறுப்பினர்–செயலர் (பொறுப்பு), கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையருக்கு முகவரியிட்ட 15.09.2025 நாளிட்ட கடிதத்தில் அருணாசலமூர்த்தி என்ற பெயரில் விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை என்றும், கட்டிட உரிமையாளரிடம் விவரம் கோரப்பட்டது என்றும், ஆனால், தற்போது கட்டிட உரிமையாளர் மேற்கொண்டு கட்டுமானம் செய்யப்படுவதாக புகார் வந்ததின் பேரில் அனுமதியற்ற கட்டிடத்தின் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு விவரத்தினை தெரிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

மேற்கண்ட கடிதத்தின் மீது கோயம்புத்தூர் மாநகராட்சியால் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, கட்டிட உரிமையாளர் கோயம்புத்தூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்திற்கு விண்ணப்பம் அளிக்காத நிலையில், அக்கட்டிடத்தினை உடனடியாக அகற்ற கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்."

6. முதல் எதிர்மனுதாரரான கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டல உதவி ஆணையாளர் தரப்பில் உதவி நகர திட்டமிடுநர் 03.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"கோயம்புத்தூர் மாநகராட்சியில், மத்திய மண்டலம், வார்டு எண் 65 நடராஜ தேவர் காலனியில் மாநகராட்சியிடம் வணிக உபயோகத்திற்காக தரை மற்றும் முதல் தளம் கட்ட அனுமதி பெறப்பட்டு கட்டிட விதிகளுக்கு முரணாகவும், கூடுதலாக இரண்டாம் தளம் மற்றும் டெரஸ் தளம் கட்டியும் பக்கவாட்டு திறவிடங்கள் விடாமலும் கட்டப்பட்டுள்ளதை கள ஆய்வில் கண்டறியப்பட்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச்சட்டம் 1971ன் பிரிவுகள் 56 மற்றும் 57–இன் கீழ் 25.11.2016 அன்று தாக்கீது வழங்கப்பட்டது. ஆனால் கட்டிட உரிமையாளர் கட்டுமானப்பணி தொடர்ந்ததால், தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 56/2A இன் கீழ் இரண்டாம் தளம் மற்றும் டெரஸ் தளம் கோயம்புத்தூர் மாநராட்சியால் 19.01.2017 அன்று பூட்டி சீல் வைக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து கட்டிட உரிமையாளர் திரு M.அருணாச்சலமூர்த்தி மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண் W.P No.19202/2021 நாள் 23.09.2021–இன்படி மேல் முறையீடு வழக்கு தொடரப்பட்டது. இம்மேல் முறையீட்டு வழக்கின் தீர்ப்பில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் உரிய சட்ட விதிகளின்படி 8 வார காலத்திற்குள் நடவடிக்கை எடுக்க உத்திரவிடப்பட்டதை தொடர்ந்து, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறையால் 24.12.2021 அன்று நடத்தப்பட்ட விசாரணையில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் சட்ட திட்டங்களின்படி கோயம்புத்தூர் மாநகராட்சியால் வழங்கப்பட்ட கட்டிட அனுமதி வரைபடத்தில் உள்ளபடி கட்டிடத்தினை வடிவமைக்கவும், அனுமதிக்கு மாறாகவும், கூடுதலாகவும் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தை இடிக்கவும் மூன்று மாத கால அவகாசம் அளிக்கப்பட்டது. ஆனால் கட்டிட உரிமையாளர் மேற்கண்ட ஆணையினை செயல்படுத்தாமல், ஏற்கனவே உள்ள நிலையிலேயே கட்டிடத்தை பயன்படுத்திவருகிறார்.

மேலும் கட்டிட உரிமையாளர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு எண் W.P.No.8198/2023ல் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் 21.04.2023 அன்று பின்வருமாறு தீர்ப்பு அளித்துள்ளது.

"Therefore in view of the above, we are granting liberty to the petitioner to appear before the Deputy Director of Town and Country Planning and make a proper application for seeking revised planning approval, if so advised, within a period of two weeks from the date of receipt of a copy of this order."

இன்றைய விசாரணையில் மனுதாரர் கோயம்புத்தூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தின் இணை இயக்குநர் / உறுப்பினர்–செயலர் அவர்கள் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையருக்கு 15.09.2025 நாளிட்ட கடிதத்தில் கட்டிட உரிமையாளர் திரு. அருணாசலமூர்த்தி என்ற பெயரில் விண்ணப்பம் ஏதும் சமர்ப்பிக்கப்படவில்லை என்றும், எனவே அனுமதியற்ற கட்டிடத்தின் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு, அதன் விவரத்தினை தெரிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது என்ற விவரம் தெரிவித்ததின் அடிப்படையில், மேற்கண்ட அனுமதியற்ற கட்டிடத்தின் மீது உரிய அமலாக்க நடவடிக்கையை கோயம்புத்தூர் மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவத்திற்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்."

7. இரண்டாம் எதிர்மனுதாரரான திரு. அருணாசலமூர்த்தி என்பவருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதற்கு, “No such person in the address. Hence letter to return” என குறிப்பிடப்பட்டு இம்முறைமன்ற நடுவத்திற்கு திரும்ப பெறப்பட்டுள்ளது.

8. மனுதாரரின் முறையீட்டு மனு, வாக்குமூலம் மற்றும் முதல் எதிர்மனுதாரரான கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டல உதவி ஆணையாளரின் அறிக்கை, உதவி நகர திட்டமிடுநரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

கோயம்புத்தூர், திருச்சி ரோடு, எண்.996 என்கிற முகவரியில் கடை, குடோன் அமைத்து பின்பகுதியில் உள்ள வாய்க்கால் பகுதியினை ஆக்கிரமித்து மனுதாரரின் பகுதியான நடராசதேவர் காலனி குடியிருப்பு பக்கம், கடை உரிமையாளர் திரு.M.அருணாசலமூர்த்தி வழி அமைத்துள்ளார் என்பதும், நடராச தேவர் காலனியின் சாலை மிகவும் குறுகலான மற்றும் ஒருவழிப் பாதை சாலையாகும் என்பதும், மேற்கண்ட குடோன் குறித்து 2015–ம் ஆண்டு கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரிடம் வழங்கப்பட்ட புகார் மனுவின் அடிப்படையில் மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், மாநகராட்சி நகர் நலப் பிரிவு ஆய்வு செய்து 2016–ம் ஆண்டு கம்பெனி, குடோன், கடை அகற்ற நோட்டீஸ் வழங்கப்பட்டும், அகற்றப்படவில்லை என்பதும், மேற்படி புதிய கட்டிடம் நான்கு மாடிகளாக 4000 சதுர அடிகள் வணிக வளாகமாக கட்டப்பட்ட கட்டிடத்தினை உள்ளூர் திட்ட குழுமத்தின் மூலம் அக்கட்டிடத்திற்கு சீல் வைக்கப்பட்டது என்பதும், இக்கட்டிடம் தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரபட்ட வழக்கில் 2018–ம் ஆண்டு உயர்நீதிமன்ற வழக்கின் தீர்ப்பின்படி கம்பெனி அகற்றப்பட்டது என்பதும், ஆனால் மீண்டும் அதே கட்டிடத்தில் தகர சீட்டுகளால் அடைப்புகள் ஏற்படுத்தி உரிமையாளர் கடை & குடோன் கட்டிடத்தில் குடிபெயர்ந்தார் என்பதும், மேற்படி கட்டிடத்தின் சீல் அகற்ற சென்னை உயர்நீதிமன்றத்தில் மாநகராட்சி, உள்ளூர் திட்ட குழுமத்தின் மேல் தொடரப்பட்ட வழக்கு 2022–ம் ஆண்டு தள்ளுபடி செய்து, அக்கட்டிடத்தை அகற்ற தீர்ப்பு வழங்கப்பட்டது என்பதும், கடை உரிமையாளர் உடனடியாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்த வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டு, முதல் தீர்ப்பின்படி No.996 திருச்சி ரோட்டில் அமையும் கட்டிடத்திற்கு புதிய வரைபடம் மூலம் திருத்தப்பட்ட கட்டிடத்தின்படி மீண்டும் அனுமதி பெற வலியுறுத்தப்பட்டது என்பதும், இப்பொருள் தொடர்பாக கோயம்புத்தூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தின் இணை இயக்குநர்/ உறுப்பினர்–செயலர் (பொறுப்பு), கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையருக்கு முகவரியிட்ட கடிதத்தில் அருணாசலமூர்த்தி என்ற பெயரில் விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை என்பதும், ஆனால், தற்போது கட்டிட உரிமையாளர் மேற்கொண்டு கட்டுமானம் செய்யப்படுவதாக புகார் வந்ததின் பேரில் அனுமதியற்ற கட்டிடத்தின் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு விவரத்தினை தெரிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது என்பதும், மேற்கண்ட கடிதத்தின் மீது கோயம்புத்தூர் மாநகராட்சியால் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதும், கட்டிட உரிமையாளர் கோயம்புத்தூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்திற்கு விண்ணப்பம் அளிக்காத நிலையில், அக்கட்டிடத்தினை உடனடியாக அகற்ற கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டலம், வார்டு எண் 65 நடராஜ தேவர் காலனியில் மாநகராட்சியிடம் வணிக உபயோகத்திற்காக தரை மற்றும் முதல் தளம் கட்ட அனுமதி பெறப்பட்டு கட்டிட விதிகளுக்கு முரணாகவும், கூடுதலாக இரண்டாம் தளம் மற்றும் டெரஸ் தளம் கட்டியும் பக்கவாட்டு திறவிடங்கள் விடாமலும் கட்டப்பட்டுள்ளதை கள ஆய்வில் கண்டறியப்பட்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச்சட்டம் 1971ன் பிரிவுகள் 56 மற்றும் 57–இன் கீழ் 25.11.2016 அன்று தாக்கீது வழங்கப்பட்டது என்பதும், ஆனால் கட்டிட உரிமையாளர் கட்டுமானப்பணி தொடர்ந்ததால், தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 56/2A இன் கீழ் இரண்டாம் தளம் மற்றும் டெரஸ் தளம் கோயம்புத்தூர் மாநராட்சியால் 19.01.2017 அன்று பூட்டி சீல் வைக்கப்பட்டது என்பதும், இதனை தொடர்ந்து கட்டிட உரிமையாளர் திரு M.அருணாச்சலமூர்த்தி மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு எண் W.P No.19202/2021 நாள் 23.09.2021–இன் தீர்ப்பின்படி உரிய சட்ட விதிகளின்படி 8 வார காலத்திற்குள் நடவடிக்கை எடுக்க உத்திரவிடப்பட்டதை தொடர்ந்து, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறையால் 24.12.2021 அன்று நடத்தப்பட்ட விசாரணையில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் சட்ட திட்டங்களின்படி கோயம்புத்தூர் மாநகராட்சியால் வழங்கப்பட்ட கட்டிட அனுமதி வரைபடத்தில் உள்ளபடி கட்டிடத்தினை வடிவமைக்கவும், அனுமதிக்கு மாறாகவும், கூடுதலாகவும் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தை இடிக்கவும் மூன்று மாத கால அவகாசம் அளிக்கப்பட்டது என்பதும், ஆனால் கட்டிட உரிமையாளர் மேற்கண்ட ஆணையினை செயல்படுத்தாமல், ஏற்கனவே உள்ள நிலையிலேயே கட்டிடத்தை பயன்படுத்திவருகிறார் என்பதும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் கட்டிட உரிமையாளரால் தொடரப்பட்ட வழக்கு எண் W.P.No.8198/2023ன் மீது வழங்கப்பட்ட 21.04.2023 நாளிட்ட தீர்ப்பின்படி, கட்டிட உரிமையாளர் திரு. அருணாச்சலமூர்த்தி விண்ணப்பம் கோயம்புத்தூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தின் இணை இயக்குநர் / உறுப்பினர்–செயலர் அவர்களுக்கு சமர்ப்பிக்காத நிலையில், மேற்கண்ட அனுமதியற்ற கட்டிடத்தின் மீது உரிய அமலாக்க நடவடிக்கையை கோயம்புத்தூர் மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும் என்பது கோயம்புத்தூர் மாநகராட்சியின் மத்திய மண்டல உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவி நகர திட்டமிடுநரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்ட கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டலம், வார்டு எண் 65 நடராஜ தேவர் காலனியில் மாநகராட்சியிடம் வணிக உபயோகத்திற்காக தரை மற்றும் முதல் தளம் கட்ட அனுமதி பெறப்பட்டு கட்டிட விதிகளுக்கு முரணாகவும், கூடுதலாக இரண்டாம் தளம் மற்றும் டெரஸ் தளம் கட்டியும் பக்கவாட்டு திறவிடங்கள் விடாமலும் கட்டப்பட்டுள்ளது என மனுதாரர் தெரிவித்துள்ள மனு குறித்து, மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் கட்டிட உரிமையாளர் திரு. அருணாசலமூர்த்தி என்பவால் தொடரப்பட்ட வழக்கு எண் W.P.No.8198/2023ன் மீது வழங்கப்பட்ட 21.04.2023 நாளிட்ட தீர்ப்பின்படி, கட்டிட உரிமையாளர் கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமத்திற்கு இதுநாள் வரை விண்ணப்பம் அளிக்கவில்லை என்ற நிலையில், மேற்கண்ட அனுமதியற்ற கட்டிடத்தின் மீது உரிய அமலாக்க நடவடிக்கையை கோயம்புத்தூர் மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும் என உதவி நகர திட்டமிடுநர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971ன் கீழும் மற்றும் விதி மீறி கட்டப்பட்ட கட்டிடங்கள் குறித்து மாண்பமை உச்சநீதிமன்றம் மற்றும் மாண்பமை உயர்நீதிமன்றங்கள் வெளியிட்டுள்ள வழிகாட்டுதல்களின்படியும் உரிய சட்டபூர்வ நடவடிக்கையும் மேற்கொள்ளுமாறு கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டல உதவி ஆணையாளருக்கு

அறிவுறுத்துமாறும், மேலும் கோயம்புத்தூர் மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் / உறுப்பினர் செயலர்(பொ) தனது 15.09.2025 நாளிட்ட கடிதத்தில் கட்டிட உரிமையாளர் திரு. அருணாச்சலமூர்த்தி விண்ணப்பம் ஏதும் சமர்ப்பிக்கவில்லை என்று தெரிவித்து இருந்தும், அக்கடிதத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்காத கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டலத்தின் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்குமாறும், கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 21–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. வீ. சேகர்,
கதவு எண் 101.A, நடராஜன் காலனி,
இராமநாதபுரம் (PO),
கோயம்புத்தூர் –641 045.

(2) ஆணையர், கோயம்புத்துர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்–641 001.

(3) உதவி ஆணையாளர், மத்திய மண்டலம்,
கோயம்புத்துர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்–641 018.

(4) திரு. அருணாச்சலமூர்த்தி,
கதவு எண் 22, நடராஜ் காலனி,
இராமநாதபுரம் அஞ்சல், கோயம்புத்தூர் தெற்கு,
பின்கோடு–641 045.

(5) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண். 75 சாந்தோம் நெடுஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

(6) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண். 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

நகல்:

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

24/7/26
செயலாளர்.

23/7/26

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை–600 032